DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous C.C.**No.150/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | அழகுமலை (P.w.2) |
| Father/Husband Name | : | சாத்தன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day February of 2024

(<u>எதிரி ஆஜர் இல்லை. மேற்படி எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது</u>)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது மேலகுருணைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை பார்த்து வருகிறேன். அசா1 எனதுமனைவி. எதிரிகளை தெரியும். உறவினர்கள். சுமார் 2021ம் வருடம் தேதி மாதம் சரியாக ஞாபகம் இல்லை ஒரு நாள் வேலைக்கு சென்றுவிட்டேன். முனியசாமி எனது அப்பாவை கல்லால் எறிந்து காயப்படுத்தியதாக சொன்னார்கள். எனது அப்பா திருச்சுழி அரசு மருத்துவமனையில் இருந்தார். நான் மாலையில் சென்று எனது அப்பாவை பார்த்தேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.குவி–

2. வழக்கு பற்றி எனக்கு நேரடியாக தெரியாது . காயம்பட்ட நபர் எனது அப்பா என்பதாலும் புகார்தாரர் எனது மனைவி என்பதாலும் அவர்களுக்கு

ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையிலும் முதல் விசரணையில் சொல்லி உள்ள சங்கதிகளைதான் சொல்லி உள்ளேன்.

மறு விசாரணை –

3. இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUCHULI

Calender Miscellaneous C.C.**No.150/2023**

Preliminary Register

Sessions

Deposition of witness for Prosecution
Defence

| | | |
|---|---|---|
| Name | : | **குருவம்மாள்** (P.w.1) |
| Father/Husband Name | : | **அழகுமலை** |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 2nd day February of 2024

(<u>எதிரிகள் ஆஜர் இல்லை. மேற்படி எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு – 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது</u>)

**முதல் விசாரணை :–**

1. நான் தற்போது மேலகுருணைகுளத்தில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை பார்த்து வருகிறேன். எதிரிகளை தெரியும் பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர்கள். கடந்த 08.10.2021ம் தேதியன்று மதியம் 11 மணியளவில் வேலைக்கு செல்வதற்காக வீட்டிற்கு வெளியே பாத்திரம் விளக்கிகொண்டிருந்தபோது முனியசாமி என்பவர் பைக்கில் வந்தார். பாத்திரத்தின் மேல் ஏற்றினார். ஏன் ஏற்றுகிறீர்கள் என்று கேட்டதற்கு அப்படி தாண்டி ஏத்துவேன் தேவுடியா என்ற அசிங்கமாக திட்டி என்னடி பண்ணுவ என்று கேட்டார். வாக்குவாதம் வந்தது. சத்தம் கேட்டு எனது மாமனார் சாத்தன் வந்தார். எனது மாமனார் கேட்டதற்கு ஏன் இப்படி பண்ணுகிறிர்கள் என்று கேட்டதற்கு எனது மாமனாரை கல்லை வைத்து எதிரி முனியசாமி மண்டை

உடைத்துவிட்டார். பின்னர் காயம்பட்ட எனது மாமானரை அழைத்து கொண்டு திருச்சுழி அரசு மருத்துவமனை சென்றேன். நான் திருச்சுழி அரசு மரத்துவமனையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்து என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்று கொண்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். (**அந்த புகார் வாக்குமூலம் அதசாஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி–

2. முனியசாமி தகப்பனார் இருளனும் எனது மாமனார் சாத்தனும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். எதிரி வசித்து வரும் வீடு நாங்கள் குடியிருந்து வரும் வீடு அதை சுற்றியுள்ள வீடுகள் இருளன் பெயரில் பட்டா உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. இருளன் பெயரில் உள்ள பட்டாவை பிரித்து தரசொல்லி சாத்தன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எதிரி குடும்பத்தார் மீது விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விசாரணையில் இருளன் அவர் பெயரில் உள்ள பட்டாவை பிரித்து தரமுடியாது என்ற சொன்னதின் அடிப்படையில் எதிரிகள் மீது முன்விரோதம் உள்ளது என்றால் சரிதான். எதிரி முனியசாமி மருத்துவ துறையில் படித்து யோகா மருத்துவராக பணியாற்றி வருகிறார் என்றால் சரிதான். எதிரிகள் வீட்டிற்கு எதிரே தென்வடல் சந்து உள்ளது என்றால் சரிதான். அந்த தென்வடல் சந்துக்கும் கிழக்கே குருசாமி, முருகேஸ்வரி, முனியசாமி ஆகியோர்கள் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டிற்கு தெற்கே குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீட்டின் வாசல் தெற்கு பக்கம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்கே கிழ மேல் தெரு உள்ளது. எனது வீட்டை ஒட்டி எனது மைத்துனர் வேல் பாண்டி குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். எனது மைத்துனர் வீட்டிற்கு மேற்கே எதிரிக்கு சொந்தமான தொழுவம் உள்ளது என்றால் சரிதான். அந்த தொழுவத்திற்கு மேற்கே காளியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான்.

எனது மாமனார் சம்பவ சமயத்தில் தனியாக கண்மாய் கரை பகுதியில் வசித்து வந்தார் என்றால் சரிதான். நான் குடியிருந்து வந்த வீட்டிற்கும் எனது மாமனார் குடியிருந்து வந்த வீட்டிற்கும் இடையே சுமார் 1கிமீ துாரம் இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு எனதுமாமனார் நடந்து வர கால் மணி நேரம் ஆகும் என்றால் சரிதான். எனது மாமனார் எனது வீட்டின் அருகே தான் சம்பவத்தின்போது இருந்தார். சம்பவத்தின்போது எனது வீட்டிற்கு அருகே உள்ள தெருவில் நின்று கொண்டிருந்தார். போலிசார் விசாரணையில் வேலைக்கு போவதற்காக வெளியே பாத்திரங்களை போட்டு கழுவி கொண்டிருந்தேன் என்று சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். எனக்கும் எதிரி முனியசாமிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது என்ற விபரத்தையும் போலிசார் விசரணையில் சொல்லி உள்ளேன். 1ம் எதிரி முனியசாமி எந்த இருசக்கர வாகனத்தில் வந்தார் என்று சொல்ல முடியாது என்றால் முடியும். அதன் பதிவு எண் தெரியாது. எந்த வகையான வாகனம் என்றால் ஹீரோ ஹோண்டா வாகனம் ஆகும். எனக்கு எழுதப்படிக்க தெரியும். நான் 6ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது மாமனார் ஏன் இப்படி பண்ணுறிங்க என்று 1ம் எதிரி முனியசாமியைப் பார்த்து கேட்டார் என்ற விபரத்தை போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்ட போது எனது பக்கத்து வீட்டில் குடியிருந்தவர்கள் யாரும் சம்பவ சமயத்தில் இல்லை என்றால் சரிதான். எனதுபக்கத்து வீட்டில் குடியிருக்கும் யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். காளிராஜ் என்பவரும் கண்மாய் கரை பகுதி அருகில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிரி முனியசாமி சம்பவ சமயத்தில் அசிங்கமாக பேசியதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு காளிராஜ் விலக்கிவிட்டபிறகு சாத்தன் வந்தாரா என்றால் காளிராஜ் வருவதற்கு முன்பாகவே சாத்தன் வந்துவிட்டார். என்னை 1ம் எதிரி அசிங்கமாக பேசிய விபரம் சாத்தனுக்கு நான் சொல்லி தெரியுமா என்றால் சத்தம் கேட்டே வந்துவிட்டார். நேரடியாக தெரியும். நான் குடியிருந்த வீடு ஓட்டு தாழ்வார வீடு.

அந்த ஓட்டு வீடு மேல்புறத்தில் இருந்து கீழ்நோக்கி சரிந்து காணப்படும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு முன்பு ஓடு நீட்டிவிடப்பட்டிருக்கும் என்றால் சரிதான். வீட்டிற்கு போக வேண்டும் என்றால் குனிந்து போக வேண்டும் என்றால் சரிதான். குனிந்து போகவில்லை என்றால் ஓடு தட்டி நெற்றியில் காயம் ஏற்பட்டு விடும் என்றால் வாய்ப்பு இல்லை. சாத்தன் வீட்டிற்குள்ளேயே போகவில்லை. 1ம் எதிரி முனியசாமி சாத்தன் மீது நாங்கள் குடியீருக்கும் வீட்டி வாசலுக்கு நேராக உள்ள கிழக்கு பக்கமாக சந்தில் நின்று கொண்டு கல்லால் எறிந்தார். 1ம் எதிரி முனியசாமி அவர் வீட்டிற்கு முன்பு உள்ள சந்தில் நின்று சாத்தான் மீது கல்லை வைத்து எறிந்தார். இருவரும்நேராக நின்று கொண்டிருந்தார்கள். இருவருக்கும் இடையே உள்ள தூரம் 3 அடி இருக்கும். 1ம் எதிரி முனியசாமி சாத்தன் மீது எறிந்த கல் என்னவென்றால் கருங்கல் ஆகும். சம்பவத்தின்போது சாத்தன் மீது எறிந்த கல் போலிசார் வரும்வரை அங்கேயே கிடந்தது. சம்பவ நடந்தவுடனே காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார்களா என்றால் சாட்சிமுதலில் ஆமாம் என்று சொல்லிவிட்டு புகார் கொடுத்த பின்பு போலிசார் வந்ததாக சொல்கிறார். சம்பவ இடத்தில் வைத்து போலிசார் என்ன நடந்தது என்று கேட்டு போலிசார் எழுதிக் கொண்டார்களா என்றால் சாட்சி ஆமாம் என்று சொல்லி விட்டு மீண்டும் மருத்துவமனையில்தான் புகார் வாக்குமூலம் வாங்கியதாக சொல்கிறார். சம்பவத்தன்றே மருத்துவமனையில் இருந்தபோது போலிசார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டார்கள் என்றால் சரிதான். கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன விபரம் இருந்தது என்று போலிசார் என்னிடம் சொன்னார்கள். மேற்படி புகாரில் எனது மாமனார் கையொப்பம் செய்துள்ளார். அரசு துறையில் பணிபுரியும் 1ம் எதிரி முனியசாமி மீது வழக்கு பதிவு செய்யப்படும்போது 1ம் எதிரியின் பணிக்கு பாதகம் ஏற்படும் என்று எனக்கு தெரியும். எதிரிகள் மீது மனு கொடுக்கும் பட்சத்தில் பட்டா பிரித்து தருவார்கள் என்ற எண்ணத்தில் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. 1ம் எதிரிமுனியசாமி சாத்தன் மீது எறிந்த கல்லை போலிசார் கைப்பற்றிய விபரம் எனக்கு தெரியும். அந்த கல்லை நானும்

சாத்தனும் அடையாளப்படுத்தியன் மூலம் கைப்பற்றினார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் 08.10.2021ம் தேதியன்று பகல் 11மணியளவில் நான் சொன்ன எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி முனியசாமி என்னை பார்த்து எந்த விதமான அசிங்கமான வார்த்தையும் பேசியதில்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரி மீது முனியசாமி சாத்தன் மீது கல் எறிந்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருந்தும் வரும் ஓட்டு தாழ்வாரத்தில் சாத்தன் வழக்கிற்காக முட்டி ஏற்பட்ட காயத்தை வைத்து பொய் வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும் 1ம் எதிரி தாயார் பேச்சியம்மாளும் ஒரே ஊரான எரேசனம்பட்டியில் பிறந்துள்ளோம் என்றால் சரிதான். எதிரியின் குடும்பத்தாருக்கும் எங்களுக்கும் சொத்து சம்பந்தமாக ஏற்பட்ட முன்விரோதத்தின் அடிப்படையில் பொய்யாக வழக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சொத்து சம்பந்தமாக எதிரி குடும்பத்தார் என் மீதும் சாத்தன் மீதும் புகார் கொடுத்து விசாரணை நடைபெற்றது என்றால் இல்லை. சாத்தனை தான் கேட்கவேண்டும். உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் எனது வீட்டு பக்கத்தில் உள்ளவர்களுக்கு தெரிந்திருக்கும் என்றாலும் சம்பவ நடக்கவில்லை என்பதால்தான் யாருக்கு தெரியவில்லை என்றாலும் அருகில் உள்ள யாரையும் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. 2ம் எதிரி பேச்சியம்மாளுக்கு பயந்து யாரும் சாட்சியம் அளிக்க வரமாட்டார்கள். சம்பவ சமயத்தில் யாரும் குடியிருக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் அருகில் உள்ளவர்கள் இருந்தார்களா என்றால் வீட்டிற்குள் இருந்திருக்கலாம் நான் பார்க்கவில்லை. இரு சக்கர வாகனத்தை வைத்து பாத்திரம் மீது ஏற்றி எந்தெந்த பாத்திரத்திங்கள் சேதமானது என்று போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். சேதமான பாத்திரங்கள் அனைத்தையும் போலிசார்கள் போட்டோ எடுத்து பார்த்தார்கள். எங்களுடைய புகாரிலியோ, போலிசார் விசாரணையிலோ பாத்திரங்கள் என்னென்ன சேதமானது என்ற சொல்லவில்லை என்றால் சரியல்ல. இரு சக்கர வாகனத்தில் முனியசாமி எனது

பாத்திரத்தின் மீது ஏற்றியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. எதிரி குடும்பத்தார் மீது முன் விரோதத்தின் காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில் திருச்சுழி சார்பு ஆய்வாளர் காளைசாமியும் நாங்களும் உறவினர்கள் என்றால் சரியல்ல பழக்க வழக்கத்தில் தெரியும். சார்பு ஆய்வாளர் நல்ல பழக்கம் என்றாலும் சார்பு ஆய்வாளரை துாண்டி எதிரி மீது பொய் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிரி ஓட்டி வந்த வாகனம் ஹோண்டா வாகனம் என்று போலிசார் விசாரணையிலும், புகாரிலும் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். சாத்தன் மீது எறிந்த கல்லால் ஏற்பட்டதால் ரத்தம் வந்ததா என்றால் வந்தது. ஆடைகளில் ரத்தம் பட்டதா என்றால் பட்டது. சாத்தன் ரத்தம் பட்ட ஆடைகளை கைப்பற்றவில்லை பார்த்தார்கள். ரத்தம்பட்ட ஆடையுடன் நின்று கொண்டிருந்ததை போட்டோ போலிசார் எடுக்கவில்லை.

மறு விசாரணை –

3.இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்,
நீதித்துறை நடுவர்,
திருச்சுழி.